உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி-1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் - மலேசியா.**

---

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)<br>(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்) |
| தொகுப்பாசிரியர் | : | **உடையார்கோவில் குணா.** |
| துணை பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**<br>முனைவர் **க.சுஜாதா**<br>முனைவர் **க.இந்துமதி**<br>முனைவர் **சி.சங்கீதா**<br>**செ.தமிழரசி** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம் |
| உரிமை–வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன் கோவில்,<br>தஞ்சாவூர்–613 501.<br>தொலைபேசி: 04362268167<br>கைபேசி: 9443938797, 7530002454. |
| அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 318 |
| விலை | : | ரூ.250/– |
| ISBN | : | **978-81-909877-5-2** |
| நூல் வடிவமைப்பு | : | பரிதி பதிப்பகம்,<br>சோலையார்பேட்டை.<br>வேலூர் மாவட்டம்.<br>கைபேசி: 8098908840, 7200693200 |

# திருக்குறள் கூறும் போர் உபாயங்கள்

திருமதி அனித்தா சசிகரன்

39

மனித வாழ்வியலுக்கு வேண்டிய முக்கிய அங்கங்களை அறம், பொருள், இன்பம் என முப்பெரும் பிரிவுகளாகப் வகுத்து உலகிற்கு ஈர்ந்த வகையில் உலகிலுள்ள எல்லாத் தமிழ்நூல்களிலும் தனித்துவச் சிறப்பினை திருக்குறள் பெற்றுள்ளது. உலகப்பொதுமறை எனப் புகழப்படும் திருக்குறளில் போர் பற்றிய செய்திகள், உபாயங்கள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். பழந்தமிழர் வரலாற்றில் போர் தவிர்க்க முடியாததொன்றாக இருந்துள்ளது. நாட்டின் பாதுகாப்பு, அமைதிகாத்தல், ஆள்புல விஸ்தரிப்பு முதலான காரணங்களுக்காக அரசுகளிடையே போர் நடைபெற்றுள்ளது. அரசன் தன்னுடைய அதிகாரத்தை காத்துக் கொள்ளவும் அல்லது பெருக்கிக் கொள்ளவும் அல்லது பெருமையாகக் காட்டிக்கொள்ளவும் போரை நடாத்தினான். இப்போரானது தூதுவர்கள், படைவலிமை, வெளியுறவுக்கொள்கை, ஒற்றர்கள் வழங்கும் செய்திகள் ஊடாக நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. திருவள்ளுவர் காலத்தில் போர் தவிர்க்க முடியாததொன்றாக இருந்ததால் அமைதிவழியில் செல்ல முடியாதபோது போர்முறையை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் திருவள்ளுவர் போர் பற்றிய பல விடயங்களை முன்வைத்துள்ளார்.

போரைத்தவிர்த்து அமைதிவழி செல்வதை திருவள்ளுவர் விரும்பியிருந்தார். இதனை,

**நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல் (*679 குறள்*)**

நண்பருக்கு நன்மை செய்வதைக் காட்டிலும் பகைவரை நண்பராக்கிக் கொள்ளுதல் என்பது விரைந்து செய்யத்தக்கது.

**பகையென்னும் பண்பி லதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற்று அன்று (871 குறள்)**

பகை என்னும் பண்பற்ற ஒரு செயலை ஒருவன் பொழுதுபோக்கும் விளையாட்டாகக் கூட விரும்பக்கூடாது.

**பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்**
**தகைமைக்கண் தங்கிற்று உலகு (874 குறள்)**

பகைவரையும் நண்பராக்கிக் கொண்டு நடக்கத்தக்க நல்லவரின் பெருமையுள் தான்; உலகம் அடங்கியிருக்கிறது.

**இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து (குறள் 879)**

முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்டவேண்டும். இல்லையெனில் முதிர்ந்தபோது அதனை வெட்டுபவர் கை துன்புறும். மேற்படி குறள்கள் போர் என்பது பகை முற்றிய நிலையில் ஏற்படுவதனால் பகையை ஆரம்பத்தில் கிள்ளியெறிந்து பகைவனையும் நண்பனாக்கிக் கொண்டு விளையாட்டுக்குக் கூட பகையை விரும்பாது போரைத் தவிர்த்து அமைதிவழியில் செல்லவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளன.

இருப்பினும் போர், பகை என்பது இக்காலத்தில் இயல்பானதொன்றாக இருந்துள்ளதை திருக்குறளில் அரண் அமைத்தும், படைகள் சேர்த்தும், நாட்டைக்காக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதன் ஊடாக அறியமுடிகிறது. அரண்கள் பகைவரின் தாக்குதலில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வலுவானதாக இருக்கவேண்டுமெனவும், இவை இயற்கையாக அமைந்திருத்தல் நன்மை பயக்குமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரண் என்ற அதிகாரத்தில் வரும் 741 தொடக்கம் 750 வரையான குறள்களில் நாட்டின் பாதுகாப்பில் அரண் எத்தகைய முக்கியத்துவமென்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்து குறளில் அரசின் முக்கிய உடமைகளான நாட்டுப்பற்று மிக்க மக்கள், குறையாத செல்வம், நாட்டின் நலமறிந்து செயற்படும் அமைச்சர், துன்பத்தில் உதவும் அண்டை மாநில நட்பு, மோதியழிக்க முடியாத அரண் போன்றவற்றோடு ஆற்றல் மிகுந்த படையும் ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறும்  (குறள் 381)**

மேலும் ஒரு படை எவ்வாறு வலுவான படையாக அமைந்திருக்க வேண்டுமென்பதை படைமாட்சி என்னும் அதிகாரத்தில் 761 தொடக்கம் 770 வரையான குறள்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு சில.

**உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை  (குறள் 761)**

எல்லா உறுப்புக்களும் அமைந்து பகைவர்களுக்கு அஞ்சாத வெற்றிப்படையே, அரசன் செல்வங்களுள் தலைமையானது.

**ஆழிவின்று அறைபோகாத தாகி வழிவந்த**
**வன்க ணதுவே படை  (குறள் 764)**

அழிவில்லாததாய் வஞ்சனைக்கு பலி ஆகாததாய் தொன்றுதொட்டுவந்த வலிய வீரத்தை உடையதே சிறந்த படையாகும். எனவே போரின் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் பெரும் கூறாக படைக்கட்டமைப்பு இருந்துள்ளது.

போர்க்குணமுடைய படைவீரர்களின் பலம், ஆற்றல்கள் பற்றியும் திருக்குறள் குறிப்பிட்டுள்ளது. இவர்கள் போர்க்களத்தில் உயிரையும் கொடுக்கத் தயங்காத வீரம் செறிந்த போர்வீரர்களாகவும், வீரமரணம் அடைவதையும், போரின்போது பட்ட விழுப்புண்ணை தமது வாழ்நாள் பாக்கியமாகவும் எண்ணினர். புறமுதுகிட்டு ஒடுதலையும், பகைவருக்கும், அவர்களுடைய போர்கருவிகளுக்கும் அஞ்சி உள்ளே இருப்பதை பெரும் கோழைத்தனமாகவும் இழுக்கான செயலாகவும் கருதினர். தமக்கான வாய்ப்புக்கள் வரும்வரை காத்திராமல் தாமே முன்வந்து தம்முயிரில் சிறிதும் பற்றுவைக்காது பகைவர்கள் அஞ்சுவதற்கேற்ற தன்மையுடையவர்களாக பொறுப்புணர்வோடும் விருப்பத்துடனும் போரில் ஈடுபட்டனர் எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இவை பற்றி படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள 771 தொடக்கம் 770 வரையான குறள்களின் ஊடாக அறியமுடிகிறது.

**என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை**
**முன்நின்று கல்நின் றவர்  (குறள் 771)**

**கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது (குறள் 772.....780)**

திருக்குறளில் போரிலே பயன்படுத்தப்பட்ட போர்க்கருவிகள் பற்றியும் கூறப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. முப்போர்க் கருவிகளான வாள், வேல், அம்பு போன்றன பயன்படுத்தி போரிலே ஈடுபட்டதை பின்வரும் குறளடிகளினூடாக அறியமுடிகிறது.

**பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சு மவன்கற்ற நூல் (குறள் 727)**

**கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது (குறள் 772)**

**கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெற்வேல் பறியா நகும் (குறள் 774)**

போரிலே போர் நிகழும் காலம், இடம் என்பன போர் வெற்றிக்கு முக்கியம் என்பது காலமறிதல் என்னும் அதிகாரத்தில் 481இல் இருந்து 490 வரையான குறள்களிலும், இடனறிதல் என்னும் அதிகாரத்தில் 491இல் இருந்து 500 வரையான குறள்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது (481 குறள்)**

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடம் கண்ட பின்அல் லது (491 குறள்)**

போரை வெற்றி கொள்ள ஒற்றர்கள் அவசியமாக உள்ளனர். அதாவது போர்க்காலங்களில் எதிரியின் வலிமை, பலவீனம், போர் நிகழும் இடம், காலம் போன்றவற்றை மாற்றுவேடந்தரித்து அறியக்கூடியவர்கள் இவர்களே. மேலும் பகைவர்கள் எத்தகைய துன்பங்கள் செய்தாலும் தான் அறிந்ததை வெளிப்படுத்தாத பண்பினைக் கொண்டவர்கள் ஒற்றர்களே என்பதைப் பின்வரும் குறள் எடுத்துக் கூறுகிறது.

**துறந்தார் படிவத்தார் ஆகிஇறந்து ஆராய்ந்து**
**என்செயினும் சோர்வுஇலாது ஒற்று (குறள் 586)**

இதனால் ஒன்றைக் காண்பதற்கு எவ்வாறு இரண்டு கண்கள் தேவையோ அதைப்போன்று நாட்டை ஆளும் மன்னனுக்கு இருகண்களாக ஒற்றரையும் நீதிநூல்களையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். எனவே ஓர் அரசனுக்கு ஒற்றர் அவசியம், இல்லையெனில் அவ்வரசனுக்கு வெற்றி வாய்ப்பு இல்லையென்பதாகும்.

**ஒற்றினான் ஒற்றி பொருள்தெரியா மன்னவன்**
**கொற்றம் கொளக்கிடந்தது இல் (குறள் 583)**

போரை இலகுவாக முறியடித்து எதிரிகளின் ஆதிக்கத்தை எவ்வாறு தகர்த்தெறிவது, எவ்வாறான நடவடிக்கைகளை கையாண்டு நாட்டின், எல்லைகளை விரிவுபடுத்திக்கொள்ளலாம், எப்பொழுது சமாதானமாகச் செல்லலாம் போன்ற தந்திரோபாயங்கள் மற்றும் தற்காப்புக் கருத்துக்களும் திருக்குறளில் முன்வைக்கப்பட்டுள்ளது. போர் நிகழும் போது தன்னுடைய வலிமை, எதிரியின் வலிமை, இருவருக்கும் துணைபுரிபவர் வலிமை அறிந்து அதற்கேற்பவே போரைத் தொடங்கல் வேண்டும், அவ்வாறு வலிமையறியாது தொடர்ந்து போரிட்டால் அழிவுதான் ஏற்படும். எனவே போரைத் தொடங்கு முன்னர் வலிமையறிதல் அவசியம் என வலியுறுத்துவதனூடாக தற்காப்புத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல் (471 குறள்)**
**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்** *(473 குறள்), (461, 465, 466, 467, 468, 482, 474, 477, 479, 480, 827, 873, 882, 883 குறள்கள்)*

மேலும் எதிரியை இலகுவில் வெற்றிகொள்ளும் முகமாக சில தந்திரோபாயங்களும் திருக்குறளில் முன்வைக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு சில, *(830, 875, 876, 877, 878, 879, 880 குறள்கள்)*

**பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு**
**அகநட்பு ஒரீஇ விடல் (830 குறள்)**

பகைவர் நண்பராக மாறும் காலம் வரும் போது முகத்தளவில் மட்டும் நட்புக் காட்டி அகத்தளவில் நட்பை நீக்கி விடுதல் வேண்டும்.

**தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்**
**இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று (875 குறள்)**

தனக்கு எத்துணையும் இல்லாமல் இரண்டுபகையுடையவன், அப்பகையுள் இரண்டைத் துணையாக்கிக்கொள்ளல் வேண்டும்.

திருக்குறள் போர்வீரர்கள் மற்றும் அரசன் மனதில் அறஉணர்வை ஏற்படுத்துமுகமாக போர் தொடர்பான அறக்கருத்துக்களையும் வலியுறுத்தியுள்ளது. பகை, போர் ஏற்பட்டால் உயிர்கள், பொருட்கள் அழிவடைய நேரிடும். இதனால் அறநெறியில் அறிவுரை கூறி அமைதியான முறையில் உயிர்களை காவல் செய்ய வேண்டும் என்கிறது.

**மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்லென்ப**
**தன்உயிர் அஞ்சும் வினை (குறள் 244)**

மேலும் போர்க்களத்தில் வீரர்கள் போர் மேற்கொள்ளும் போது வலிமைமிக்கவர்களிடம் மட்டுமே போர் செய்யவேண்டும், பகைவர்களுக்குத் துன்பம் வரும்போது உதவி செய்யவேண்டும், போரிலே வீழ்ந்தவர் மேல்காட்டும் இரக்கம் காட்டுதலே பகைவரை வெல்லும் வீரத்தை விட சிறந்த ஆண்மை என போர் தொடர்பான அறக்கருத்துக்களும் திருக்குறளில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து (குறள் 250)**

**பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்றுஅதன் எஃகு (குறள் 773)**

திருக்குறளில் மனித சமுதாயத்தை மேம்படுத்தும் வகையில் பல அரிய தகவல்கள் காணப்படுகின்ற போதும் போர் தொடர்பான உபாயங்களும் கருத்துக்களும் (செய்திகள்) இடம்பெற்றமைக்கு குறள் எழுந்த கால அரசியல் சூழ்நிலைகள், அதிகாரப் போட்டி,

ஆள்புல விஸ்தரிப்பு, நாட்டையும், மக்களையும் பாதுகாத்தல் போன்ற காரணங்களுக்காக போர் நடைபெறுவது தவிர்க்க முடியாது என்பதை குறளில் சொல்லப்பட்ட மேற்கூறப்பட்ட கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. திருவள்ளுவர் போரை ஆதரிக்காமல் அமைதி வழிசெல்ல வேண்டும் என வழிகாட்டியிருந்தாலும் அக்காலத்தில் போரென்பது தவிர்க்க முடியாததென்பது திருக்குறளில் இருந்து மேலும் தெரியவருகிறது. இதனால்தான் அரசின் ஆறு முக்கிய பிரிவுகளுள் ஒன்றாக படையைக் குறிப்பிட்டு, போரில் படைகள் சேர்த்தும், அரண்கள் அமைத்தும் நாட்டைக் காக்க வேண்டும் எனக் திருக்குறள் கூறுகிறது. மேலும் படையொன்று எவ்வாறு வலுவான படையாக மிளிர வேண்டுமெனவும் அப்படையிலுள்ள போர்வீரர்களின் வீரம், பலம், ஆற்றல், துணிவு போன்றவை தொடர்பாகவும் போர்க்கருவிகளைப் பயன்படுத்தி போர் புரிவது பற்றியும் குறிப்பிட்டுள்ளது. போரிலே வெற்றியீட்டிக்கொள்ள இடம், காலம் என்பவற்றோடு பகைவரின் வலிமையறிதலும் அவசியம் என வலியுறுத்தியுள்ளது. இவ்வாறு போரை வெற்றிகொள்ள சிறந்த படை, வீரம் செறிந்த படைவீரர்கள், போர்க்கருவிகள் இருந்தால் மட்டும் போதாது, ஒற்றர்கள், தற்காப்புத்திட்டங்கள், போர்த்தந்திரோபாயங்கள் போன்றனவும் அவசியமானவை எனவும் வலியுறுத்தியுள்ளது. இவ்வகையில் திருக்குறள் பகை, போரை எவ்வாறு தமக்குச் சாதகமாக முறியடிக்கலாம் என உபாயங்களை முன்வைத்துள்ள அதேவேளை போரின் போது வலிமையற்றவர்களிடம் போர் புரிதல் கூடாது, எதிரிக்குத் துன்பம் வரும் போதும், போரிலே தோற்றிருக்கும் போதும் உதவி செய்து இரக்கம்காட்டுதல் வேண்டும் என போர்சார்ந்த அறநெறிக்கருத்துக்களையும் முன்வைத்துள்ளது.

தென்னாசிய நாடுகளுக்கு போர் பற்றிய கோட்பாடுகள், வரைவிலக்கணங்கள், போர்நெறிமுறைகள் ஐரோப்பிய நாடுகளின் வருகையின் பின்னரே அறிமுகமானது என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆனால் ஐரோப்பியர் வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அரண் (கோட்டை), ஒற்றர் (உளவாளி), போர் தொடர்பான அறக்கருத்துக்கள் (போர்ச்சட்டங்கள்), போர்த்தந்திரோபாயங்கள், தற்காப்புத்திட்டங்கள் போன்ற அம்சங்கள் திருக்குறளில் வலியுறுத்தப்பட்டு இருப்பதை இவ்வாய்வின் ஊடாக

அறியமுடிந்துள்ளது. இவ்வாறு போர் தொடர்பான அனைத்து சிந்தனைகளையும் திருக்குறள் வகுத்துத் தொகுத்தளித்துள்ளது.

## உசாவியவை


1. சிதம்பரனார், சாமி, 1956, வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், ஜனசக்தி பிரசுராலயம், சென்னை.
2. முருகரத்தினம். தி, 1982, குறள் கூறும் அரசு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
3. திருக்குறள் பரிமேலழகருரையுடன், 1968, திருக்குறள் பதிப்புவெளியீடு, ஸ்ரீகாசிமடம் திருப்பனந்தாள்.



**திருமதி அனித்தா சசிகரன்**
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்